# மாலை முரசு

பக்கங்கள் 20+3

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 30 வியாழக்கிழமை 16.10.2025 | அதிர்வு 77


## நாளை கூடுகின்றது சம்பள நிர்ணய சபை

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விவகாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகச் சம்பள நிர்ணய சபை நாளை வெள்ளிக்கிழமை கூடுகின்றது.

02▶


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


# இந்தியாவில் பிரதமர் ஹரிணி ஜெய்சங்கருடன் இன்று பேச்சு

## மோடியையும் சந்திப்பார்

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடனான சந்திப்புடன் இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது மூன்று நாள் இந்தியப் பயணத்தை இன்று தொடங்கினார்.

இந்தச் சந்திப்பு குறித்து கருத்துத் தெரிவித்த ஜெய்சங்கர், இன்று காலை புதுடில்லியில் இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரியவைச் சந்தித்தமையில் மகிழ்ச்சி அடைகின்றார் எனக் கூறினார்.

“இலங்கைக்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் நமது ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தோம்.” - என்று அவர் எக்ஸ் தளத்தில் ஒரு பதிவில் மேலும் கூறினார்.

02▶



### இறுதிப் போர் தொடர்பில் சாட்சியம் வழங்கத் தயார் என்றால்

# சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்த வேண்டும் பொன்சேகா!



## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு....

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இறுதி யுத்தத்தில் நடந்த விடயங்கள் தொடர்பில் உண்மையாகவே சாட்சியம் வழங்குவார் என்றால் சர்வதேச குற்றவியல் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்த வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான

02▶




# யாழ்ப்பாணத்திலும் பதுங்கியிருந்த செவ்வந்தி

## விசாரணைகளில் தகவல்

குற்றக் குழுக்களின் தலைவர் “கணேமுல்ல சஞ்சீவ“ படுகொலையில் நேபாளத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட இஷாரா செவ்வந்தி யாழ்ப்பாணத்திலும் பதுங்கியிருந்தார் என்ற விடயம் தெரியவந்துள்ளது.

செவ்வந்தியிடமும், அவருடன் கைது செய்யப்பட்ட குழுவிடமும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்போதே, இலங்கையில் நீதிமன்ற வளாகத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கு பிறகு செவ்வந்தி 4 நாள்கள் இலங்கையில் தலைமறைவாகி இருந்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மித்தெனிய மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலேயே அவர் தலைமறைவாகி இருந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. பின்னர் இந்தியாவுக்குத் தப்பிச் சென்று அங்கு மூன்று வாரங்கள் தங்கியிருந்த பின்னரே அவர் நேபாளம் சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜே.கே. பாய் என்பவரே செவ்வந்திக்கு அடைக்கலம் கொடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது. செல்வந்தியுடன் கைதான



அவர் பாதாள உலகக் குழுவின் தலைவர் கெஹேல்பத்தர பத்மேயின் சகா எனவும் தெரியவருகின்றது. செவ்வந்தியுடன் இணைந்து அவரும் வெளிநாட்டுக்குத் தப்பியோடியுள்ளார். அவர் ஊடாகவே செவ்வந்திக்குரிய பணம் வழங்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இந்தியாவில்...

இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய நாளைமறுதினம்18 ஆம் திகதி வரை இந்தியாவில் இருப்பார். அப்போது அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட பல உயர்மட்டத் தலைவர்களுடன் சந்திப்புகளை நடத்துவார்.

நாளை நடைபெறவுள்ள என்.டி.ரி.வி. உலக உச்சி மாநாட்டில் “நிச்சயமற்ற காலங்களில் மாற்றத்தை வழிநடத்துதல்” என்ற தலைப்பில் அவர் முக்கிய உரையை நிகழ்த்தவுள்ளார்.

### நாளை கூடுகின்றது...

தொழில் ஆணையாளர் நாயகம் எச்.எம்.டீ.என்.கே.வட்டலியத்த தலைமையில், கொழும்பிலுள்ள தொழில் திணைக்களத்தில் பிற்பகல் 1 மணியளவில் சம்பள நிர்ணய சபை கூடும் எனத் தெரியவருகின்றது.

சம்பள நிர்ணய சபையின் தொழில் அமைச்சின் நியமன உறுப்பினர்கள், தொழிற்சங்கங்கள் சார்பில் இலங்கைத் தொழிலாளர் காங்ரஸின் சட்ட ஆலோசகர் கே.மாரிமுத்து, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் முத்துக்குமார், விவசாய தோட்ட தொழிலாளர் காங்ரஸ் சார்பில் ஆர்.எம்.கிருஷ்ணசாமி, அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கிட்னண் செல்வராஜா, இலங்கை செங்கொடி சங்கத்தின் சார்பில் அதன் ஆலோசகர் மேனகா கந்தசாமி மற்றும் பி.ஜி.சந்திரசேன உள்ளிட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், தொழில் தருநர் சார்பில் பெருந்தோட்டக் கம்பனிகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### சர்வதேச குற்றவியல்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இறுதி யுத்தத்தில் வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பில் சாட்சியம் வழங்கத் தயார் எனக் கூறி வருகின்றமை தொடர்பாக ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் விசாரணை நடைபெற்றால் இனப்படுகொலை நிஷரூபிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்ற போது அதனைக் குழப்பும் விதமாக அரசுடன் இணைந்து செயற்படும் விதமாக சரத் பொன்சேகாவின் கருத்துக்களும் இருந்து வருகின்றன.

இறுதி யுத்தத்தின் போது இராணுவம் தொடர்சியாக மக்களை அழிக்கின்ற நடவடிக்கைகளின் போது கடும் ஆட்லறித் தாக்குதல்களை மக்கள் மீது பயன்படுத்தி வந்த சுழலில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்குக் கண்காணிக்கப்பட்ட ஒரு பொறிமுறையை ஏற்படுத்துவதற்கு என்னுடன் தொடர்புகளை மேற்கொண்டார்கள்.

அவ்வகையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துகின்ற முயற்சிகளை மேற்கொண்டேன். குறிப்பாக 2009ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி பிற்பகல் முதல் இரவு 8 மணி வரை இருபக்கத் தொடர்புகளை மேற்கொண்டு இணக்கப்பாடு எற்படுத்தப்பட்டது.

குறிப்பாக இரண்டு ஆயர்களான இராயப்பு யோசப் ஆண்டகை மற்றும் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையுடன் அரசு நேரடியாகத் தொடர்பு கொண்டு அரச தரப்பில் பஸில் ராஜபக்ஷவும் நானும் வன்னி கட்டுப்பாட்டுக்குச் சென்று அங்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் நடேசன் வெளியில் வந்து மக்களைப் பாதுகாப்பாக வெளியில் கொண்டு வருவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

ஆனால், பேச்சு வெற்றிகரமாக முடிவடைந்தபோதும் இராணுவம் ஆட்லறித் தாக்குதலைத் தொடர்ச்சியாக மேற்கொண்ட நிலையில் எதற்காக இதனைச் செய்கிறீர்கள் என்ற போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டில் இல்லை, அவர் நாடு திரும்பிய பின்னர் தேசிய பாதுகாப்பு கூட்டத்தில் கலந்துரையாடியே முடிவு எடுக்கப்படும் எனக் கூறப்பட்டது. எனினும், அந்தக் கூட்டத்தில் முடிவுகளை எடுக்கப்படாது தொடர்சியாக மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வந்தது. இதனை ஏன் தொடர்ந்தும் இதனை செய்கிறீர்கள் எனக் கேட்டபோது தேசிய பாதுகாப்புக் கூட்டம் கூடும் வரை தாக்குதலை நிறுத்த முடியாது எனக் கூறப்பட்டது.

மேலும் வெள்ளைக்கொடியுடன்தான் வர முடியும் எனக் கூறப்பட்டது. இது சாத்தியப்பாடு இல்லாத விடயம் என்பதால் எனது இணக்கப்பாட்டை நான் முடிவுறுத்திக் கொண்டேன்.

காரணம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அமைப்பின் மூலம் மக்களைப் பாதுகாப்பாகக் கொண்டு வருவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சரிவராத நிலையில்தான் என்னுடனான தொடர்பு மேற்கொள்ளப்பட்டது.

வெள்ளைக்கொடி விவகாரம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. காரணம் பேச்சு வார்த்தைகள் மூலம் இணக்கம் காணப்பட்ட போதும் தொடர்ச்சியான ஆட்லறித் தாக்குதல் மேற்கொள்ளப்படுவது மக்களை இல்லாது ஒழிப்பதற்கான சூழலைத்தான் அரசு செய்தது என்பதே நான் கூறும் விடயம். இது இனப்படுகொலையின் விவகாரமாகும்.

ஆனால், சரத் பொன்சேகா தற்போது கூறி வரும் வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பில் நான் கூற முடியாது. வெள்ளைக்கொடியுடன் வந்தவர்களைக் கொலைசெய்தார்கள் என்பது கடந்த காலங்களில் வெளிவந்த உண்மைகள் என்பது அனைவருக்கும் புரிந்த விடயம் ஆகும்.

சரத் பொன்சேகா தற்போது கூறும் விடயம், வெள்ளைக்கொடி தொடர்பாகத் தான் சாட்சி வழங்கத் தயார் என்பதே. உள்ளக விசாரணைக்குள் வெள்ளைக் கொடி விவகாரம் முடக்கப்படுவதற்கான அத்திவாரம் போடுகின்ற கருத்தாகவே இதனை நான் பார்க்கின்றேன்.

சரத் பொன்சேகாவும் சர்வதேச குற்றவியல் விசாரணைதான் நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.” – என்றார்.

## எப்படியே ஒரு நாள்

# கைது செய்யப்படுவேன் என்று எனக்குத் தெரியும்!

## பொலிஸாரிடம் செவ்வந்தி தெரிவிப்பு



"நான் ஒரு நாள் கைது செய்யப் படுவேன் என்று எனக்குத் தெரியும்" என்று இஷாரா செவ்வந்தி, பொலிஸா ரிடம் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் வைத்து கைது செய் யப்பட்ட போதே பொலிஸாரிடம் இஷாரா செவ்வந்தி இவ்வாறு கூறியுள்ளார்.

"நேபாளத்தில் நான் சிறைப்பிடிக்கப் பட்டிருந்தேன். இவ்வாறு சிறைப்பிடிக் கப்பட்டு இருப்பதில் எனக்கு விருப்ப மில்லை. இங்கு இருப்பதைவிட எனது நாட்டுக்குச் செல்வது சுகம் என நினைத்தேன். எப்போது எனது நாட்டுக்குச் செல்வேன் என்று இருந்தேன். ஆனால், நான் எனது நாட்டுக்குச் சென்றால் பொலி ஸார் என்னைக் கைது செய்வார்கள் என்பதால் விருப்பமின்றி நேபாளத்தில் இருந்தேன்." – என்றும் பொலிஸாரிடம் இஷாரா செவ்வந்தி கூறியுள்ளார்.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத் துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கணேமுல்ல சஞ்சீவ" என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டு தப்பிச் சென்று தலைமைறை வாக இருந்த நிலையில் நேபாளத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

நேபாள அரசின் உதவியுடன் இலங்கை பொலிஸார் மற்றும் சர்வ தேச பொலிஸார் இணைந்து மூன்று நாட்களாக நேபாளத்தில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது இஷ ாரா செவ்வந்தி கைது செய்யப்பட்டார். அவருடன் ஜே.கே. பாய் உட்பட மேலும் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இஷாரா செவ்வந்தி உட்பட கைதான ஐவரும் நேற்று நேபாளத்தில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ள னர். அவர்கள் மேலதிக விசாரணைக் காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவின ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# செவ்வந்தி குழுவை 72 மணிநேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி

நேபாளத்தில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட இஷ ாரா செவ்வந்தி உள்ளிட்ட குழுவை 72 மணிநேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யப் பொலிஸாருக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ. வுட்லர் தெரிவித் துள்ளார்.

ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பெருமிதத் தம்பட்டம்

“எந்தக் கொம்பனாக இருந்தாலும், உலகில் எந்த மூலையில் பதுங்கி இருந்தாலும், தவறிழைத்தவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது. பாதாளக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் மாபியாக்களுக்கு முடிவு கட்டப்பட்டு வருகின்றது” என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்திருக்கின்றார்.

“பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு முடிவு கட்டப்படும் என நாம் உறுதியளித்திருந்தோம். இதற்காகப் பொலிஸார் உட்பட பாதுகாப்பு துறையினருக்குத் தேவையான வளங்களை வழங்கினோம். அவர்கள் சிறப்பாகத் தமது கடமைகளை செயல்படுத்தி வருகின்றனர். போதைப் பொருள் கடத்தல் மன்னர்கள் சிக்கி, சிறைக்குச் சென்றுள்ளனர். நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்ற நபர்கள் கூட நேபாளத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர் இப்படியான கைதுகள் நடத்தப்படவில்லை.” - எனவும் சந்திரசேகர் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

“கடந்த காலங்களில்தான் குற்றவாளிகள் அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்பட்டனர். ஆனால் எமது ஆட்சியில் குற்றவாளிகளுக்கு இடமில்லை. தவறிழைத்தவர்கள் சட்டத்தின் பிடிக்குள் இருந்து தப்ப முடியாது. அதேவேளை, மக்களுடைய சொத்துகளைக் களவாடியவர்கள், சூறையடித்தவர்கள் சட்டத்தின் பிடிக்குள் சிக்குவார்கள். மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜூனா மகேந்திரன் விடயத்திலும் சட்டம் செயல்படும்.” - என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அவர் பெருமிதத்துடன் கூறும் விடயங்கள் உண்மையாக இருக்கலாம். பாராட்டப்படுபவையாக இருக்கலாம்.

ஆனால், ஒரு தமிழராக அதை கூறுகின்ற அவர், இதற்குள் ஆழப் புதைந்திருக்கும் ஒரு விடயத்தை மறந்து - மறைத்து - மறுத்து - பேசுவதுதான் வியப்பாக இருக்கின்றது.

ஈழத் தமிழினத்திற்கு எதிராகப் பெரும் கொடூரங்கள் புரிந்த - பல்லாயிரம் பேரை சட்டத்திற்கு முரணான, நீதிக்கு மாறான விதத்தில் கொன்றொழித்து, காணாமலாக்கி நாசமிழைத்த ஒரு தரப்பை சட்டத்தின் முன் நிறுத்தாமல் அவரும் அவரது அரசும் கூட சேர்ந்து காபந்து பண்ணிப் பாதுகாத்துப் பெருங்குற்றம் இழைத்துக் கொண்டிருக்கின்றமையை மறந்து - மறைத்து - ஒரு தமிழராக அவர் இப்படி பேசுவது வியப்பாக இருக்கின்றது.

குற்றம் இழைத்தவர்கள், தவறிழைத்தவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்றால் - இப்படி அவர் கூறுவது உண்மை என்றால் - தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் போன்றவை குற்றங்கள் இல்லையா? அவை, இப்படி தமது அரசு குறித்து தம்பட்டமும் பெருமையும் அடிக்கும் அமைச்சர் சந்திரசேகரனினதும் அவரது அரசினதும் கண்களில் படாமல் இருப்பது எங்ஙனம்? ஒற்றைக் கண்ணில் வெண்ணெய்யும் மற்றைய கண்ணில் சுண்ணாம்பும் தடவும் பக்கச் சார்பான - பாகுபாடான - நீதி செய்ய மறுத்து நிற்கும் சிங்களத்துக்கு பதவிச் சுகத்துக்காகப் பந்தம் பிடிக்கும் இந்த முகத்துதிப் பண்பை தமிழராக அவர் எப்போதாவது கைவிடுவாரா? கைவிட்டு தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கான நீதி பற்றி குரல் எழுப்புவாரா?

ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்....!



# பசியைக் கடந்து வாழ்வை பாதுகாப்போம்!

## உலக உணவுகள் தினம் இன்றாகும்

**அப்துல் அஸீஸ் அஸ்மா**
**(ஊடகக் கற்கைகள் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)**

உணவு மனித வாழ்வின் அடிப்படை உரிமையாகும். வாழ, வளர, ஆரோக்கியமாக இருக்க உணவு அவசியம். உலகின் பல பகுதிகளில் மக்கள் போதுமான, சத்தான, பாதுகாப்பான உணவை அனுபவிக்கின்றனர். ஆனால் சில இடங்களில், குறிப்பாக வறுமை மற்றும் பசியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் தினமும் உணவுக்காக போராடுகிறார்கள். உணவு மட்டுமல்ல, வாழ்க்கையின் அடிப்படை பாதுகாப்பும், கல்வி வளர்ச்சியும், உடல்நலம் வளர்ச்சியும் உணவின் மேலே சார்ந்துள்ளது.

உலக உணவுகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 16 அன்று உலகளாவிய அளவில் கொண்டாடப்படுகிறது. இதன் நோக்கம், உணவு பாதுகாப்பு, பசியின் தாக்கம், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் உணவு சமவீதத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவததாகும். உலகின் பல இடங்களில் உணவு போதுமானதாக இருப்பினும், இன்னும் சில இடங்களில் மக்கள் பசியால் அடிமைகளாக வாழ்கின்றனர். இந்த தினம், உணவு உரிமை அனைவருக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும் என்பதற்கான உலகளாவிய விழிப்புணர்வை நமக்கு தருகிறது.

உணவுகள் தினம் ஒவ்வொருவருக்கும் உணவு பாதுகாப்பின் முக்கியத்துவத்தை நினைவூட்டும் நாள். இந்நாள், நமது கவனத்தை, உதவியை, பொறுப்பை நினைவூட்டும் போது, உலகில் எவ்வளவு மக்கள் போதுமான உணவு இல்லாமல் வாழ்கின்றனர் என்பதை நமக்கு காட்டுகிறது.

உலக உணவு தினம் (World Food Day) ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 16ஆம் திகதி உலகம் முழுவதும் உணவு பாதுகாப்பு, பசியை ஒழிப்பது மற்றும் உணவின் மதிப்பை உணர்த்தும் நோக்கில் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் உணவின் முக்கியத்துவத்தை உலகளாவிய ரீதியில் உணர்த்துவதோடு, உணவு பாதுகாப்பு, பசியை ஒழிப்பது மற்றும் உணவின் மதிப்பை உணர்த்தும் நோக்கில் கொண்டாடப்படுகிறது.

உலகளவில், 2023ஆம் ஆண்டில் சுமார் 733 மில்லியன் பேர் பசியால் பாதிக்கப்பட்டுள்ளனர், இது உலக மக்களின் ஒவ்வொரு பதினொன்றில் ஒருவர் ஆவர். ஆபிரிக்கா போன்ற பகுதிகளில் பசியின் நிலை மோசமாக உள்ளது, அங்கு மக்கள் ஒவ்வொரு ஆரோக்கியமான உணவுகளை வாங்க முடியாத நிலையில் உள்ளனர். இது உணவு பாதுகாப்பு மற்றும் பொருளாதார சமத்துவத்தின் முக்கிய சவால்களை வெளிப்படுத்துகிறது.

பாலஸ்தீனின் காசா பகுதியில், 2025 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் மாதம் வரை, 5 வயதுக்கு உட்பட்ட 54,600 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் தீவிர பசியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 12,800 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளனர். இந்த நிலைமை, இஸ்ரேலின் உதவித் தடைகள் மற்றும் தொடர்ச்சியான போர் காரணமாக ஏற்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு, மருத்துவ உதவிகள் மற்றும் அடிப்படை தேவைகள் அடைய முடியாத நிலை, குழந்தைகள் மற்றும் பெண்கள் போன்ற பலரின் உயிருக்கு ஆபத்தாக உள்ளது.

உலகளவில், உற்பத்தி செய்யப்படும் உணவுகளில் 20 வீதம் வீணாகிறது, இது வருடத்துக்கு ஒரு றில்லியன் அமெரிக்க டொலர் இழப்பை ஏற்படுத்துகிறது. உணவு வீணாக்கத்தில், வீட்டுவசதி துறையால் 60 வீதம், உணவுக் கடைகள் மற்றும் உணவகங்கள் துறையால் 28 வீதம், மற்றும் விளைச்சல் முதல் சந்தைவரை 13 வீதம் வீணாகிறது. இந்த வீணாக்கம், பசியை மேலும் மோசமாக்குகிறது. ஏனெனில் உணவு உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் வீணாக்கம் ஆகியவற்றில் அதிகமான வளங்கள் வீணாகின்றன.

உலக உணவு தினம், உணவு பாதுகாப்பு மற்றும் பசியை ஒழிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான நாள் ஆகும். ஆனால், உணவு வீணாக்கம் மற்றும் பசியால் பாதிக்கப்படும் மக்களின் நிலைமைகள், இந்த நாளின் பின்னணியில் உள்ள சிக்கல்களை வெளிப்படுத்துகின்றன. இந்த சிக்கல்களை தீர்க்க, சர்வதேச ஒத்துழைப்பு, அரசாங்கங்கள் மற்றும் சமூகத்தின் பங்கு முக்கியமானது. உணவு பாதுகாப்பு என்பது அனைத்து மக்களுக்கும் அடிப்படை உரிமையாகும். இந்த உரிமையை பாதுகாக்க, உலகம் முழுவதும் ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியம்.

உணவுகள் தினத்தின் முக்கிய நோக்கம், உலகில் எங்கு பசி, வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு நிலவுகிறது என்பதை வெளிப்படுத்துவதாகும். குழந்தைகள், பெண்கள் மற்றும் வறுமையில் வாழும் குடும்பங்கள் உணவுக்காக தினமும் போராடுகின்றனர். போதுமான உணவு கிடைக்காததால் குழந்தைகள் கல்வியில் பின்னடைவு அடைகிறார்கள், உடல்நலம் பாதிக்கப்படுகிறது, மனநலமும் குறைகிறது. பசியின் தாக்கம் தனிப்பட்ட குடும்பங்களோடு மட்டுமல்ல, சமூகத்துக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய சவாலை உருவாக்குகிறது.

உலகில் போதுமான உணவு வளங்கள் இருக்கின்றன. உணவு சமமாக பகிரப்படாததால் சிலர்

தொடர்ச்சி▼



# பசியைக் கடந்து வாழ்வை பாதுகாப்போம்!

தொடர்ச்சி▲

தொடர்ந்து பசியால் கடுமையாக பாதிக்கப்படு கிறார்கள். இதனால், உலக உணவுகள் தினம் நமது கவனத்தை பசியால் பாதிக்கப்பட்ட மக்களிடம் திருப்பு கிறது. நமது செயல்கள், உதவி மற்றும் பொறுப்பு இங்கு மிக அவசியமாகிறது என்பதை பல்வேறு ஆய்வுகள் காட்டுகின்றன.

உணவின் சமவீதம், சமூக நலனுக்கு அடிப்படை. உணவு சரியான முறையில் பகிரப்படாத போது, வறுமை மற்றும் பசி அதிகரிக்கும். ஏழை, வறுமையில் வாழும் குடும்பங்கள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் கஷ்டப்படுகின்றனர். இதை சமாளிக்க அரசு, சமூக அமைப்புகள், தொண்டு நிறுவல்கள் மற்றும் தனிப் பட்ட நபர்கள் ஒன்றிணைந்து முயற்சிக்க வேண்டும்.

உணவு போதுமானதாக இருக்கின்றபோதும், சில சமுதாயங்களில் வணிகம் மற்றும் வர்த்தக காரணமாக உணவு குறைவாகவே வழங்கப்படுகிறது. இதன் தாக்கம் உடல் ஆரோக்கியத்துக்குத் தவிர்க்க முடியாதது. நமது கவனம், உதவி மற்றும் சமூகப் பங்கு இங்கே முக்கியம்.

உலக உணவுகள் தினம், உணவு ஒரு மனித உரிமை என்பதையும், ஒவ்வொருவருக்கும் போது மான, பாதுகாப்பான உணவு வழங்கப்பட வேண்டும் என்பதையும் நினைவூட்டுகிறது. இந்நாள், மக்கள் உணவு பாதுகாப்பு, ஊட்டச்சத்து, சத்தான உணவு, பசியின் தாக்கம் மற்றும் சமூக நலன் ஆகியவற்றில் விழிப்புணர்வு பெறுவார்கள்.

மக்கள், அரசுகள் மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து உணவுக்கான திட்டங்கள், கல்வி செயலிகள் மற்றும் தொண்டு முயற்சிகள் மூலம் பசியைக் குறைக்க முயல வேண்டும். இது உலகில் உணவு சமவீதத்தை நிலைநிறுத்தும் வழியாகும்.

குழந்தைகள், குறிப்பாக 5 வயதுக்கு உட்பட்டோர், போதுமான ஊட்டச்சத்து இல்லாமல் வளரும்போது உடல் மற்றும் மனவளர்ச்சி பாதிக்கப்படுகிறது. பெண் கள், குறிப்பாக கர்ப்பிணி மற்றும் பால்ய பெண்கள், போதுமான உணவு இல்லாததால் உடல் நலம் பாதிக் கப்படுகிறது. பிறந்த குழந்தைகளின் ஆரோக்கி யத்திலும் தாக்கம் ஏற்படுகிறது.

உணவுகள் தினம், இந்த பிரச்சினைகளுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்துவதோடு, சமூக அமைப்புகள், அரசு மற்றும் நபர்கள் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. உணவு போதுமானதும், பாதுகாப்பானதும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். சமுதாயங்களில் உணவு சரியான முறையில் பகிரப்படாமல் இருந்தால், வறுமை, பசி மற்றும் நோய் தடுப்பு பிரச்சினைகள் தீவிரமாக்கும். உணவுக் குறைபாடுகளை சமாளிக்க அரசுகள், தொண்டு அமைப்புகள் மற்றும் பொது மக்கள் ஒன்றி ணைந்து செயல்பட வேண்டும்.

இதில் அடங்கும் நடவடிக்கைகள் பசியுடன் போராடும் மக்களுக்கு உணவு வழங்கல், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து திட்டங்கள், பெண்கள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் குறித்த ஊட்டச்சத்து நடவடிக்கைகள்,உணவு பாதுகாப்பு தொடர்பான கல்வி மற்றும் விழிப்புணர்வு போன்றனவாகும்.

உலகளாவிய அளவில் உணவு திட்டங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் நாடுகள் ஒன்றிணைந்து உணவு பாதுகாப்பை நிலைநிறுத்த முயல்கின்றன. உள்ளூர் அளவில், சமூக அமைப்புகள், அரசு திட்டங்கள் மற்றும் தனிநபர்கள் உணவுக்கான உதவிகளை வழங்குகின்றனர். இந்த முயற்சிகள், உணவு குறை பாடு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடி யாக உதவுவதோடு, சமூக நலனை மேம்படுத்தும் வழியாகவும் செயல்படுகின்றன.

உணவு பாதுகாப்பு என்பது, போதுமான, சுத்தமான, பாதுகாப்பான உணவு ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதைக் குறிக்கும். உணவுப் பாதுகாப்பு இல்லாதபோது மக்கள் நோய்கள், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் மனநல பாதிப்பை எதிர்கொள்ள வேண்டும். உணவு தினம், இந்த உண்மைதான் முக்கியம் என்பதைக் காட்டுகிறது. உலகில் போது மான வளங்கள் இருந்தாலும் உணவு சமவீதமாக பகிரப்படாவிட்டால், வறுமை மற்றும் பசி தொடர்ந்து தீவிரமாகும்.

நாம் உணவு தினத்தை கொண்டாடும் போது, நமது செயல், உதவி மற்றும் கவனம் வீணடிக்காமல் இருக்க வேண்டும். பாலஸ்தீன மக்களோடு சேர்ந்து உணவுக்கான உதவிகளை வழங்குவதில் நமது பங்கு முக்கியமாகிறது. நமது ஒவ்வொரு செயலும், குடும்பம், பள்ளி, சமூக அமைப்புகள் மற்றும் அரசு ஒன்றிணைந்து உணவு பாதுகாப்பை நிலை நிறுத்த உதவும். நமது செயல் மூலம் பசியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை தரலாம், வாழ்வில் மாற்றம் ஏற்படுத்தலாம்.

உலக உணவுகள் தினம், மனித உரிமை மற்றும் உணவு பாதுகாப்பின் முக்கியத்துவத்தை நினைவூட்டும் நாள். ஒவ்வொருவருக்கும் போதுமான, பாதுகாப்பான உணவு கிடைக்க நாம் உறுதி செய்ய வேண்டும். நமது உதவி வீணடிக்காமல், பசியையும் வறுமையையும் தாண்டி, அனைவருக்கும் உணவு சேரும் நாளை உருவாக்குவோம். உணவு உரிமை வாழ்வின் அடிப் படை உரிமை என்பதை மறக்காமல், நம் செயல் மூலம் சமூக நலனை நிலைநாட்டுவோம்.

# ‘பொற்பணி செம்மல்’ விருது வழங்கலும் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும்

வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றம் வேதம், மூளாய் பகுதியில் கண்பரிசோதனை செய்தவர்களுக்கான மூக்கு கண்ணாடிகளை வழங்கவுள்ளது.

இந்த நிகழ்வும் விருது வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணிக்கு நடைபெறவுள்ளன.

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் நடத்தப்படும் இந்த நிகழ்வில் ஸ்ரீ மீனாட்சி அம்மன் அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

வடக்குமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் ச.ஜெந்தன், வலிகாமம் மேற்கு பிரதேச சபை உப தவிசாளர் க.லங்கேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

மூளாய் சைவப் பிரகாச வித்யாசாலையின் அதிபர் பா. பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி எஸ்.சிவபாலசுப்பிரமணியம், மூளாய் கிராமசேவகர் சிவஷரூபன், வலிகாமம் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் நாகரஞ்சனி ஆகியோர கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் சமூக செயற்பாட்டாளர்களாக விளங்கும் ச.சின்னையா, மா. கணநாதன் மற்றும் ஆ.ஜெயராஜ் ஆகியோர் ‘பொற்பணி செம்மல்’ விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கான ஒழுங்குகளை அறநெறிப் பொறுப்பாசிரியர் நிரோஷன், தந்தை செல்வா நற்பணி மன்ற பொதுச் செயலாளர் எஸ்.கே.தளையரட்ணம், மன்றத் தலைவர் உமாவதி, பரமானந்த வல்லி ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தளம் தில்லையடி ஒஸ்மானியாவில் பாலர் பாடசாலைக்கு குடிதண்ணீர் வசதி





**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

புத்தளம், தில்லையடி தாயிப் நகரில் அமைந்துள்ள ஒஸ்மானியா பாலர் பாடசாலைக்கு நீண்டகாலமாகத் தேவையாக இருந்த குடி தண்ணீர் தேவை தற்போது நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் இலங்கை வை.டபிள்யூ. எம்.ஏ. அமைப்பின் அனுசரணையுடன், இணைப்பாளர் முஜாஹித் நிசாரின் முயற்சியால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் பாடசாலையில் கல்வி கற்கும் சிறுவர், சிறுமியர் மற்றும் ஆசிரியர்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கிய குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் புத்தளம் மாநகர சபை உறுப்பினர் சஹ்ரான் தாஜுடீன், சமூகப் பணியாளர்கள், பெற்றோர் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி அமைப்பினருக்கு வீரமானிடர் விருது

(நூருல் ஹுதா உமர் )

'தமதுயிரைப் பணயம் வைத்து பிற உயிர்களைக் காப்பாற்றிய வீர மானிடர்களை கௌரவிப்போம்' எனும் தொனிப்பொருளில் பொது மக்கள் வீரச் செயலுக்கான மன்றம் ஏற்பாடு செய்த 28 ஆவது தேசிய வீரமானிடர் விருது விழா - 2025 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சபாநாயகர் டாக்டர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்ல மிஹிகந்த மெதுர, காணிச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பேரிடரின் போது தமது உயிரைப் பணயம் வைத்து, உயிராபத்திலுள்ள மக்களைக் காப்பாற்றிய அல்லது காப்பாற்ற முனைந்த வீர மானிடர்களை பாராட்டும் விதமாக, காரைதீவு மாவடிப்பள்ளி வெள்ள அனர்த்தத்தில் 13 பேருடன் பயணித்த போது கவிழ்ந்த உழவு இயந்திரத்திலிருந்து அவர்களை மீட்க போராடியமைக்காக கிழக்கு பிராந்தியத்தில் முன்னோடி சமூக சேவை அமைப்புக்களாக திகழும் மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு, சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி அமைப்பு, மட்டுப்படுத்தப்பட்ட கல்முனை ஆழ்கடல் சுழியோடிகள் நீரியல்வள மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினர், காரைதீவு ராவனா அமைப்பினர் ஆகியோர் வீரமானிடர் விருது பாராட்டு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பொதுமக்கள் வீர செயலுக்கான மன்றத்தின் இந்த விருது வழங்கும் விழா 28 ஆவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பிரணவஷரூபன், அனர்த்த நிவாரண சேவை காரைதீவு பிரதேச உத்தியோகத்தர் எம்.ஐ.எச். சர்பின், பொதுமக்கள் வீர செயலுக்கான மன்ற உறுப்பினர்கள், மத போதகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.











# அழிவடையும் நிலையில் மந்திரி மனை...!

**றெ.றெஜினோல்ட்**
**(ஊடக கற்கைகள் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)**

இலங்கையின் வடபகுதியில், யாழ்ப்பாண நகரின் பருத்தித்துறை வீதியில் நல்லூர் சட்டநாதர் கோவிலின் தென் எல்லையில் பழமை வாய்ந்த மந்திரிமனை என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடம் அமைந்துள்ளது. இது ஜே - 107 கிராம சேவகர் பிரிவக்குள் காணப்படுகின்றது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாண அரசின் பெருமையைப் பறைசாற்றிய சின்னமாகத் திகழ்ந்தது. இது ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னரான சங்கிலியனின் அமைச்சர் ஒருவர் வசித்த அரண்மனையாக அல்லது மாளிகையாக இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதன் பெயரே "மந்திரியின் இருப்பிடம்" என்பதைக் குறிக்கிறது.

### கட்டடக் கலைச் சிறப்பும் வரலாற்றுப் பின்னணியும்

மந்திரி மனை, நல்லூரின் பாரம்பரிய வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. நல்லூர் கந்தசுவாமி கோவில், சட்டநாதர் கோவில், யமுனா ஏரி போன்ற யாழ்ப்பாண அரசின் முக்கிய சின்னங்கள் இதன் அருகிலேயே அமைந்துள்ளன. இது 2007 ஆம் ஆண்டு இலங்கை அரசால் தொல்பொருள் பாதுகாப்பு நினைவுச்சின்னமாக 1486 ஆம் இலக்க வர்த்தகமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் ஐரோப்பிய மற்றும் திராவிடக் கட்டடக்கலை பாணிகளின் கலவையாகக் காட்சியளிக்கிறது. இதன் வெளித் தோற்றம் பெரும்பாலும் ஒல்லாந்தர் காலக் கலை மரபைப் பின்பற்றுவது போல் தோன்றினாலும், மரவேலைப்பாடுகள் மற்றும் சில கட்டமைப்பு அம்சங்களில் சுதேச கலை மரபும் கலந்து காணப்படுகிறது. இது செங்கல், சுண்ணாம்பு சாந்து, மரம் மற்றும் ஓடுகள் ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. ஒரு பெரிய வளைவான நுழைவாயில், இரண்டு மாடிகள், அலங்கார மரச் செதுக்கல்கள், ஒரு கிணறு, நிலவறைகள், இரக

தொடர்ச்சி ▼

# அழிவடையும் நிலையில் மந்திரி மனை...!

தொடர்ச்சி▲

சியச் சுரங்கப் பாதைகளுக்கான வழிகள் போன்ற தனித்துவமான அம்சங்கள் இந்தக் கட்டடத்தில் உள்ளன. இந்தக் கட்டடமானது யாழ்ப்பாண மன்னர்களால் ஆரம்பத்தில் கட்டப்பட்டு, பின்னர் ஒல்லாந்தர் காலத்திலும் வேறு சில அம்சங்கள் இணைக்கப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயர்களால் கைப்பற்றப்படுவதற்கு முன்னர் இது அமைச்சரின் இருப்பிடமாக இருந்ததாக வரலாறு கூறுகிறது. இன்று ஓரளவு சிதைந்த நிலையில் காணப்பட்டாலும், அதன் கம்பீரமான தோற்றமும் நுணுக்கமான கலை வேலைப்பாடுகளும் கடந்த காலத்தின்



செழிப்பைக் கண்முன்னே கொண்டு வருகின்றன.

தொல்லியல் முக்கியத்துவம்

மந்திரிமனை 13 ஆம் நூற்றாண்டுக்கும் 17ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நல்லூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த தமிழ் மன்னர்களால் கட்டப்பட்டதென்று கருதப்படுகிறது. இவ்விடம் தமிழ் இராசதானி இருந்த இடம் என்பதால் அந்தக் கால அரச கட்டடங்களாக இருந்திருக்கும் என்று கருதப்படுகிறது. தற்போதைய மந்திரி மனையின் அமைப்பும், கலை மரபும் யாழ்ப்பாண அரசு காலத்துக்கு உரியவை எனக் கருத முடியாது. ஏனெனில் சில சுதேச கலை மரபுகளும் தமிழரின் தொழில்நுட்பமும் கலந்து காணப்பட்டாலும் கட்டடத்தின் தோற்றமும் அதன் கலை மரபும் யாழ்ப்பாண அரசுக்குப் பின்னர் ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பியருக்கும் உரியவையாகக் காணப்படுகிறது. இரு மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடத்தின் முன் முகப்பில் வாசல் பகுதியை ஒட்டியவாறு அதன் இரண்டு பக்கங்களிலும் இரு கல்லிருக்கைகள் காணப்படுகின்றன. இதிலிருந்து சமூகத்தின் செல்வாக்கு பெற்றிருந்த ஒருவரின் இருப்பிடமாக இருந்தது என்பது தெரிய வருகிறது.

இந்த இருக்கைகளுக்கு முன்பாக உயர்ந்த வேலைப்பாடுகளுடன் கூடிய வீட்டுக் கதவு காணப்படுகிறது. அதனைக் கடந்தால் பெரிய தொரு மண்டபம் காணப்படுகிறது. அம் மண்டபத்துக்கு மேற்கே இரண்டு அறைகளும் தெற்கே ஒரு அறையும் காணப்படுகின்றன. இதே அமைப்பை மேல் மாடியிலும் காணப்படுகின்றன. மேல் மாடிக்கு செல்வதற்காக தெற்கு பக்க அறையை ஒட்டியதாக மரத்தாலான படிகள் காணப்படுகின்றன. இந்தக் கட்டடத்தின் உயர்ந்த கூரை தற்கால கூரை அமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தனித்துவமான அம்சங்களை கொண்டுள்ளது. இந்த மனையின் பின்புறத்தில் நில அறை ஒன்று அதற்கு மேல் மூடு சாந்தால் அமைக்கப்பட்ட மண்டபமும் இருந்ததாகத் தெரிகிறது. தற்போது இவை இடிந்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்விடத்திலிருந்து வீட்டுக்குச் செல்லும் சுரங்க வாசல் ஒன்று பிற்காலத்தில் அடைக்கப்பட்டது. இதேபோல் வீட்டுக்குள்ளே இருந்த நிலவறையும் அதற்குள் இறங்கிச் செல்ல படிக்கட்டுகளும் பிற்காலத்தில் அடைக்கப்பட்டு இருந்ததாக தெரிகிறது.

இந்தக் கட்டடத்துக்கும் ஜமுனா ஏரிக்கும் இடையே சுரங்கப்பாதை இருந்ததாக நம்பப்படுகிறது. இந்தக் கட்டடத்தின் சிறப்பான அம்சங்களாக மரத்தலான சிற்ப வேலைகள் காணப்படுகின்றன. மர சிற்பத்திலான பொதிகையின் மேல் இரண்டு யானை தந்தங்களைப் பொருத்தியது போன்ற வளைவிலான இரு மரச் சட்டங்கள் கூரை முகட்டைத் தாங்கி நிற்பது பார்ப்போரைக் கவர்வதாக உள்ளது. பிற்பட்ட ஒல்லாந்து காலக் கலைப் பணியை நினைவு படுத்தினாலும் கட்டடத்தின் உள்ளே காணப்படும் மரத்தால் செதுக்கப்பட்ட தூண்கள் சிறந்த தொழில்நுட்பத்துடன் கூடிய பொதிகைகள் யாழ்ப்பாண அரசு காலத்தை சேர்ந்தவையாக அல்லது அக்கால கலை மரபை பின்பற்றி பிற்காலத்தில் வடிவமைக்கப்பட்டதாக காணப்படுகின்றன என கருதப்படுகிறது.

இந்த மந்திரி மனையை ஐரோப்பிய கால நினைவுச் சின்னமாக எடுத்துக்கொண்டாலும் அதற்குள் யாழ்ப்பாண அரசினுடைய வரலாறு மறைந்திருப்பதை மறுப்பதற்கு இல்லை

இந்த மந்திரி மனையின் வரலாற்று சிறப்புக் கருதித் தற்போது இது அரசின் கீழ் பாதுகாக்கப்பட்

தொடர்ச்சி▼

# அழிவடையும் நிலையில் மந்திரி மனை...!

தொடர்ச்சி ▲

டாலும் இதனுடைய முழு உரிமையும் தனியாரிடம் காணப்படுவதால் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என்பது தொல்பொருள் திணைக்களத்துக்கும் அரசுக்கும் பெரும் சவாலாகக் காணப்படுகிறது.

ஏனெனில் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாண மறுபுரிமை மையமும், தொல்பொருள் திணைக்களமும் குறித்த உரிமையாளரிடம் பேச்சு வார்த்தைகளை நடத்தியும் வரலாற்று சின்னத்தை பாதுகாப்பது தொடர்பாக எந்த நடவடிக்கையும் இதுவரைக்கும் எடுத்ததில்லை என யாழ்ப்பாண தொல்பொருள் திணைக்கள அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மந்திரி மனையைப் பாதுகாப்பதற்காக வெளிநாட்டில் உள்ள ஒரு நபரால் 50 லட்சம் ரூபா 2022ஆம் ஆண்டு யாழ்ப்பாண தொல்பொருள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் தனியாரின் கீழ் உள்ளதால் அந்த நிதியை பயன்படுத்த முடியாமல் 2024 ஆம் ஆண்டு பணத்தை தந்த நபருக்கே மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டது. அரச சொத்தாக இருந்தால் மாத்திரமே பாதுகாப்பு வேலைகளைச் செய்ய முடியும். தனியார் ஒருவரின் கீழ் இருப்பதனால் அரசு தன்னிச்சையாக செயல்பட முடியாது. சரியான பராமரிப்பு இன்மையால் கடந்த மாதம் 2025.09.17 பகல் வேளையில் மழை பெய்ததால் கட்டடத்தின் சில பகுதிகள் இடிந்து விழுந்தன. இதற்கு தனியாரினுடைய அசண்டயீனம் முக்கிய காரணமாக அமைகிறது. மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் சரிவர செய்யப்படாமை, அரசால் வழங்கப்படும் ஆலோசனைகளை அலட்சியம் செய்தல், மிருக ஜீவன்களினுடைய தொந்தரவு, இயற்கை அனர்த்தம் போன்ற காரணங்களால் இந்தப் பகுதி அழிவடைந்த நிலையில் உள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட சபை, மாநகர சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாண தொல்பொருள் திணைக்களம் என்பனவற்றால் அதன் பழமை மாறாத வகையில் பாதுகாக்க பல முயற்சிகள் எடுத்து வந்தாலும் அது தனியாரின் உடமையாகக் காணப்படுவதால் அதில் முழுமையாக ஈடுபட முடியாத நிலை அரசுக்கு காணப்படுகிறது. இதனால் தொல்பொருள் சின்னம் அழிவடையும் நிலையில் காணப்படுகிறது. அரசினுடைய சொத்தாகக் காணப்படும் பட்சத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். ஆனால் தனியாரின் சொத்து என்பதனால் அரசால் அதனைப் பாதுகாக்க ஆலோசனைகளை மாத்திரம் வழங்க முடியும். ஆனால் பாதுகாப்பதற்கான வேலைகளை செய்ய முடியாது என்பது கவலைக்கு உரிய ஒரு விடயமாகக் காணப்படுகிறது.

மந்திரி மனை, வெறும் பழமையான கட்டடம் மட்டுமல்ல அது யாழ்ப்பாண அரசின் தொல்லியல் மற்றும் கலாச்சார மதிப்பைத் தாங்கி நிற்கும் ஒரு முக்கியமான சான்றாகும். காலத்தின் சவால்களுக்கு மத்தியில், நமது முன்னோர்களின் கட்டடக்கலைத் திறனையும், கலை ஆர்வத்தையும், அரசியல் வரலாற்றையும் எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் சொல்லும் ஒரு வரலாற்றுப் பொக்கிஷமாக இது விளங்குகிறது. இந்த வரலாற்றுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்து பேணுவது ஒவ்வெருவரினதும் தலையாகிய கடமையாகும்.

## நாவிதன்வெளி உபதவிசாளரின் முன்மாதிரி

( வி.ரி.சகாதேவராஜா)

நாவிதன்வெளி பிரதேச சபையின் உப தவிசாளர் கு.புவனரூபன் தனது மாதாந்தக் கொடுப்பனவைத் சபை பொறுப்பேற்றதில் இருந்து தொடர்ந்து கல்வி மற்றும் சமூக சேவைக்காக வழங்கி வருகிறார்.

அந்த வகையில் அவரது நான்காவது மாதக் கொடுப்பனவான 20 ஆயிரம் ஷரூபா பணத்தை வீரச்சோலை கிராமத்தை சேர்ந்த கடும் நோயால் உயிரிழந்த அரன் என்பவரது மரணங் செலவுக்கு வழங்கியுள்ளார்.

நாவிதன்வெளி பிரதேச சபை உபதவிசாளர் கு. புவனஷரூபன் மரண செலவுக்கான பணத்தை வீரச்சோலை சித்திவிநாயகர் ஆலய தலைவரிடம் நேற்று கையளித்தார்.



# மக்கள் அபிமானம் பெற்ற ஊடகவியலாளர்களுக்கு மகுடம் சூட்டிய 'குரு விருதுகள் சீஸன் 02' விருது!
















**(நூருல் ஹுதா உமர் )**

ஊடகப்பரப்பில் சிறந்து விளங்கும் ஊடகவியலாளர்கள் மற்றும் செய்தியாளர்களை கௌரவிக்கும் "குரு விருதுகள் சீஸன் 02" விருது வழங்கும் விழா குரு ஊடக வலையமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளர் ஹிஸாம் ஏ.பாவா தலைமையில் சாய்ந்தமருது தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது.

குரு ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் இரண்டாவது தடவையாக இடம்பெற்ற இவ்விருது வழங்கல் விழாவில் மயோன் குஷரூப் நிறுவனத்தின் தவிசாளரும், சமூக செயற்பாட்டாளருமான மயோன் எடுகேஷன் எய்ட் தலைவர் எம்.எம்.றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தார்.

வசந்தம் தொலைக்காட்சி முகாமையாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.இர்பான் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு ஊடகப்பரப்பில் நவீன ஊடகங்கள் தொடர்பிலும், ஊடக வளர்ச்சி தொடர்பிலும் உரையாற்றி விருதாளர்களுக்கு கௌரவமளித்தார்.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி எம்.கே.எம்.பர்சான், நெஸ்ட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பொறியியலாளர் என்.எம்.சப்னாஸ், டொப் பிரிண்டிங் நிறுவன பணிப்பாளர் எம்.ஐ.எம்.மர்லியாஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.


ஊடகத்துறையில் சிறந்த சாதனையாளர்களை உலகுக்கு அடையாளங்காட்டும் இந்த விருது வழங்கல் விழாவில் விவரணம், சுகாதாரம், சுற்றாடல் எழுத்தாளர்,மனிதாபிமான உரிமை தொடர்பான ஊடகவியலாளர்கள், வானொலி அறிவிப்பாளர்கள், விளையாட்டு செய்தி அறிக்கையாளர், சிறந்த இளம் யூடியுப்பாளர்கள், கட்டுரை எழுத்தாளர், ஊடகத்துறையின் வாழ்நாள் சாதனையாளர் போன்ற பல்வேறுபட்ட துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.


# தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாகத் தெய்வீக இசை அரங்கம்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் அவர்கள் தலைமையில் தெய்வீக இசை அரங்கம் நாளை (17) இடம்பெறவுள்ளது.

இசைக்கலைமணி நடேசு செல்வச்சந்திரன் உள்ளிட்ட கலைஞர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தெய்வீக இசை அரங்கை நிகழ்த்தவுள்ளனர்.





# சமத்துவத்தின் குரல்!

“பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை தீருவதில்லை” என்ற மகாகவி பாரதியின் கூற்று, ஆண், பெண் சமத்துவத்தின் அவசியத்தை அழுத்தமாக உணர்த்துகின்றது. காலம்காலமாகப்பெண்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளையும், வாய்ப்புகளையும் மீட்டு, ஆணுக்கு நிகராகப் பெண் நிற்க வேண்டியதன் அவசியத்தை இன்றைய உலகம் உணர வேண்டும்.

ஆணுக்கு நிகர் பெண்என்பது வெறும் வார்த்தையல்ல, அது ஒரு சமூகத்தின் முழுமையான வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் அத்தியாவசியமான ஓர் அடிப்படைத் தத்துவம்.

ஆணும், பெண்ணும் உடலளவில் வேறுபட்டிருந்தாலும், அறிவு, ஆற்றல், திறமை, சிந்தனை ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் சற்றும் குறைந்தவர்கள் அல்ல. ஆணுக்கென்று சில இயல்புகளும், பெண்ணுக்கென்று சில இயல்புகளும் இருப்பினும், இவை எவருக்கும் மேன்மை தாழ்வுகளை நிர்ணயிப்பதில்லை. எந்த ஒரு பணியையும், ஆணைப் போலவே பெண்ணும் திறம்படச் செய்ய முடியும் என்பதை வரலாறு பலமுறை நிரூபித்துள்ளது. அறிவியல், கலை, இலக்கியம், அரசியல், வணிகம், தொழில்நுட்பம் என அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சாதனைகளைப் படைத்து, தங்கள் திறமையை உலகறியச் செய்துள்ளனர்.

பாரம்பரிய சமூக அமைப்புகளில், பெண்களுக்குச் சில குறிப்பிட்ட பணிகளும், பொறுப்புகளும் மட்டுமே ஒதுக்கப்பட்டன. வீட்டை நிர்வகிப்பது, குழந்தைகளைப் பராமரிப்பது போன்ற கடமைகள் பெண்களுக்கு மட்டுமே உரியதாகக் கருதப்பட்டன. அதேசமயம், ஆண்கள் மட்டுமே கல்வி கற்பதற்கும், தொழில் செய்வதற்கும், குடும்ப முடிவுகளை எடுப்பதற்கும் அதிகாரம் பெற்றவர்களாக இருந்தனர். இத்தகைய பாகுபாடு, பெண்களின் தனிப்பட்ட திறமைகளையும், அபிலாஷைகளையும் நசுக்கியது.ஆனால், நவீன காலகட்டத்தில், இந்தத் தடைகள் உடைபட்டு வருகின்றன. பெண்கள் கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள் உயர்பதவிகளை வகிக்கிறார்கள் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்கிறார்கள் நாடுகளை வழிநடத்துகிறார்கள். இவை அனைத்தும், ஆண், பெண் இரு பாலருக்கும் சரிசமமான வாய்ப்புகள் வழங்கப்படும் போது, அவர்களால் எத்தகைய உயரத்தையும் எட்ட முடியும் என்பதற்குச் சான்றுகளாகும்.



பொனிஸ்ரெலா சந்தியாசன்
(இரண்டாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

பெண் சமத்துவம் என்பது பெண்களுக்கான போராட்டம் மட்டுமல்ல, அது ஆண்களும் இணைந்து வென்றெடுக்க வேண்டிய சமூக மாற்றம். பெண்கள் மீதான பாகுபாடுகளைக் களைய ஆண்கள் தங்கள் மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டும். குடும்பத்திலும், பணியிடத்திலும், சமூகத்திலும் பெண்களுக்கு உரிய மரியாதையையும், சம வாய்ப்புகளையும் வழங்க வேண்டும். அரசுகள் பாலின சமத்துவத்தை உறுதி செய்யும் சட்டங்களை இயற்றுவதும், அவற்றை முறையாக நடைமுறைப்படுத்துவதும் மிக அவசியம். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதும், அவர்களின் பாதுகாப்புக்கு வழிவகை செய்வதும் அரசின் தலையாய கடமையாகும். அதேபோல், கல்வி நிறுவனங்கள் பாடத்திட்டங்கள் மூலமாகவே பாலின சமத்துவத்தைப் போதித்து, எதிர்காலச் சந்ததியினரிடையே சமத்துவ மனப்பான்மையை வளர்க்க வேண்டும்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைய, அதன் மொத்த மக்கட்தொகையில் பாதியளவான பெண்களின் உழைப்பையும், பங்களிப்பையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். பெண்கள் பணியிடங்களுக்கு வரும்போது, அது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கிறது. அவர்களின் வருமானம் குடும்பத்தின் பொருளாதார நிலையை மேம்படுத்துகிறது. மேலும், பெண்கள் தங்கள் குடும்பததுக்குச் சிறந்த கல்வியையும், சுகாதாரத்தையும் வழங்க உறுதி செய்கிறார்கள், இது எதிர்காலத் தலைமுறையின் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

ஆணுக்கு நிகர் பெண் என்பது காலத்தின் கட்டாயம். இருபாலரும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல், ஒருவருக்கொருவர் துணையாக நின்று, சமத்துவத்துடன் வாழும் சமுதாயமே உண்மையான வளர்ச்சி காண முடியும். பெண்களுக்குச் சம வாய்ப்புகள், உரிமைகள், மரியாதைகள் கிடைக்கும் போது, அவர்கள் தங்கள் முழுத் திறனையும் வெளிப்படுத்தி, குடும்பத்துக்கும் சமூகத்துக்கும், நாட்டுக்கும் பெருமை சேர்ப்பார்கள். பாலினப் பாகுபாடற்ற ஓர் உலகத்தை நோக்கிய பயணத்தில், ஆணுக்கு நிகர் பெண் என்ற உயரிய தத்துவத்தை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டு, அதை நடைமுறைப்படுத்த உறுதி ஏற்போம்.

# பேக்கரி உற்பத்திகள் என்ற போர்வையில் கஞ்சா கலந்த மதனமோதகம் விற்பனை!

## நோர்ட்டன் பிரிட்ஜ் பொலிஸார் மடக்கினர்

(க.கிஷாந்தன்)

பேக்கரி பொருள் விற்பனை என்ற போர்வையில் கஞ்சா கலந்த மதனமோதக போதைப்பொருளை விற்பனை செய்தார் எனக் கூறப்படும் சந்தேக நபர், நோர்ட்டன் பிரிட்ஜ் பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

56 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

லொறியொன்றில் பேக்கரி பொருள் விற்பனை என்ற போர்வையில் கஞ்சா கலந்த மதனமோதக போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய நோட்டன் பிரிட்ஜ் ஊடாக இந்த லொறி ஹட்டன் நோக்கி பயணித்துக்கொண்டிருக்கையில் அதனை பொலிஸார் பரிசோதனைக் குட்படுத்தினர்.

இதன்போது லொறிக்குள் இருந்து 250 மதனமோதக உருண்டைகள் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபரை நீதிமன்றத்தில் இன்று முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.








பிரியங்கா தர்மராசா,
உளவியல் துறை மாணவி,
யாழ்.பல்கலைக்கழகம்.

# நவீன தொழில்நுட்பமும் தனிமை உணர்வும்!

## ஓர் உளவியல் பார்வை

நாம் வாழும் இந்த 21 ஆம் நூற்றாண்டில், மனிதர்கள் தகவல் தொடர்பு சாதனங்களால் சூழப்பட்டுள்ளனர். சமூக ஊடகங்கள், கைபேசி செயலிகள் என அனைத்தும் நம்மை உலகத்துடன் இணைத்திருப்பதாகத் தோன்றினாலும், பலர் ஆழமான தனிமை உணர்வில் சிக்கித் தவிக்கிறார்கள். இது ஒரு விசித்திரமான முரண்பாடு. ஒரு அறைக்குள் நூற்றுக்கணக்கான சமூக ஊடக 'நண்பர்களுடன்' தனியாக இருப்பது, இன்றைய யதார்த்தமான துயரம். இது ஒரு சாதாரண மனநிலை மாற்றம் அல்ல, மாறாக நமது சமூகப் பிணைப்புகள் சீரழிந்து வருவதன் ஒரு தீவிரமான அறிகுறி.

### தனிமை ஏன் ஒரு தீவிரப் பிரச்சினை?

உளவியலின்படி, தனிமை என்பது வெறுமனே தனியாக இருப்பது அல்ல. அது, மற்றவர்களுடன் ஆழமான, அர்த்தமுள்ள தொடர்புகளை ஏற்படுத்த முடியாத ஒரு மனநிலை. மனிதர்கள் சமூக விலங்குகள். நமக்கு நெருக்கமான உறவுகள் தேவை. தொழில்நுட்பம், இந்த இடைவெளியை மேலும் பெரிதாக்குகிறது. சமூக ஊடகங்கள் ஒரு 'மாய உலகை' உருவாக்குகின்றன. அதில் எல்லோரும் மகிழ்ச்சியாகவும், வெற்றிகரமாகவும் இருப்பது போல் சித்தரிக்கப்படுகிறது. இது, 'நான் மட்டும் ஏன் இப்படி இருக்கிறேன்?' என்ற தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. மற்றவர்களின் 'சரியான' வாழ்க்கையைப் பார்க்கும் போது, நமது வாழ்க்கை போதாது என்ற எண்ணம் ஏற்பட்டு, தனிமை உணர்வு அதிகரிக்கிறது. இந்த உணர்வு நீடித்தால், அது மனஅழுத்தம், பதற்றம் போன்ற பல மனநலப் பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கும். நமது மூளை, சமூகத் தொடர்புகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாதபோது, மூளையில் உள்ள நரம்பியல் அமைப்புகள் எதிர்மறையாகப் பாதிக்கப்படுகின்றன.

### உளவியல் தரும் ஆழமான தீர்வுகள்

மனநல வல்லுநர்கள் இந்தத் தனிமை உணர்வைக் கையாள பல பயனுள்ள உத்திகளை வழங்குகிறார்கள்.அவை, அறிவாற்றல் மறுசீரமைப்பு (Cognitive Restructuring): தனிமையின் வேர், நமது சிந்தனை முறையில்தான் இருக்கிறது. 'என்னை யாரும் நேசிக்கவில்லை,' 'நான் யாருக்கும் தேவையில்லாதவன்' போன்ற எதிர்மறை எண்ணங்களை நாம் மாற்ற வேண்டும். இதற்கு, 'நான் இப்போது தனியாக உணர்ந்தாலும், புதிய நபர்களைச் சந்திக்கவும், உறவுகளை வளர்க்கவும் எனக்கு வாய்ப்புகள் உள்ளன' போன்ற நேர்மறை எண்ணங்களை வளர்ப்பது அவசியம். நமது எண்ணங்களை மாற்றுவது, உணர்வுகளையும் மாற்றும்.

நடத்தை மாற்றம் (Behavioral Activation) தனிமையாக இருக்கும்போது, பலரும் வீட்டை விட்டு வெளியே வரத் தயங்குவார்கள். இது தனிமையை மேலும் அதிகமாக்கும். இந்தச் சுழற்சியை உடைக்க, நாம் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். தினமும் ஒரு நடைப் பயிற்சிக்குச் செல்வது, நண்பர்களைச் சந்திக்க அழைப்பது, அல்லது ஒரு புதிய பொழுதுபோக்கில் ஈடுபடுவது போன்றவை மனநிலையை மேம்படுத்த உதவும். ஒரு கலை வகுப்பு அல்லது விளையாட்டுக் கழகத்தில் சேர்வது, ஒரே ஆர்வமுள்ளவர்களைச் சந்திக்க ஒரு நல்ல வாய்ப்பு.

நினைவாற்றல் (Mindfulness) மற்றும் சுய இரக்கம் (Self-Compassion) தற்போதைய தருணத்தில் முழுமையாக கவனம் செலுத்துவதன் மூலம், எதிர்கால அச்சங்களையும், கடந்தகால வருத்தங்களையும் தவிர்க்கலாம். மேலும், தனிமை உணர்வால் நம்மை நாமே கடிந்துகொள்ளாமல், அன்புடன் நடத்த வேண்டும். 'நான் இந்த உணர்வை அனுபவிக்கிறேன், அது பரவாயில்லை என்று நமக்கு நாமே ஆறுதல் சொல்லிக்கொள்வது, உளவியல் ரீதியான வலிமையை அதிகரிக்கும்.

தொழில்நுட்பம் நம் கைகளில் உள்ளது, அது நம்மை ஆளக் கூடாது. மெய்நிகர் உலகில் இருந்து விலகி, நிஜ உலகில் மனித உறவுகளை வளர்ப்பதில் கவனம் செலுத்துவோம். ஏனெனில், ஒரு மெய்நிகர் நட்பு, ஒரு உண்மையான அரவணைப்புக்கு ஈடாகாது. நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து, ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவோம்.



# ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மத்தியில் பிரபல கால்பந்தாட்ட வீரரின் இறுதிச் சடங்கு!

செம்மணி பகுதியில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற கோர விபத்தில் அகால மரணம் அடைந்த வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த பிரபல உதைபந்தாட்ட வீரர் யூட் மெரினின் இறுதிச் சடங்கு இன்று (16) ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மத்தியில் இடம் பெற்றது.

உதை பந்தாட்ட வீரரின் பூதவுடல் அவரின் வீட்டில் இருந்து எடுத்து வரப்பட்டு உடுத்துறை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் பொது மக்கள், உறவினர்கள், நண்பர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டது.

தொடர்ந்து யூட் மெரினின் பூதவுடலால் செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் இறுதிக்கோல் அடிக்கப்பட்டு மோட்டார் வாகன பவனியுடன் தாழையடி புனித அந்தோனியார் ஆலயத்துக்கு இரங்கல் திருப்பலிக்காகக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு இரங்கல் திருப்பலியைச் செம்பியன் பற்று பங்கு தந்தை ஜஸ்டின் ஆதர் ஒப்புக்கொடுத்தார்.

பின்னர் தாழையடி புனித அந்தோனியார் ஆலய சேமக்காலையில் யூட் மெரினின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த இறுதி சடங்கு நிகழ்வில் ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், இலங்கை முழுவதும் இருந்து பிரபல கால்பந்தாட்ட வீரர்கள், வீராங்கனைகள், இளைஞர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.












# கணிதப் போட்டிப் பரீட்சையும் கணித ஆய்வுகூட திறப்பு விழாவும்







( கொட்டகலை நிருபர்)

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஞாபகார்த்த கணிதப் போட்டிப் பரீட்சையும் கணித ஆய்வு கூட திறப்பு விழாவும சனிக்கிழமை கலாம் எண்ணியல் மன்றத்தின் ஏற்பாட்டில் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

அதிபர் எஸ். கமலதர்ஷினியின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலிய கல்வி வலயத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதி கல்வி பணிப்பாளர் எம்.கணேசராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக நுவரெலிய வலயத்தின் கோட்டம் இரண்டு கணித பாட ஆலோசகர் வி.ஸ்ரீகுமார் கலந்து கொண்டிருந்தார்.

நுவரெலியா கோட்டம் இரண்டில் உள்ள தரம் 11 பாடசாலை மாணவர்களுக்கு இடையே இந்தப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும், கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், கேம்பிரிட்ஜ் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

முதல் இரண்டு இடங்களைப் பெற்ற தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம், மற்றும் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற கணித வினாடி வினா போட்டியில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் வெற்றி வாகை சூடின.

கலந்து கொண்ட மாணவர்களுக்கு கலாம் எண்ணியல் மன்றம் சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கியது.

# பழைய ஓய்வூதிய திட்டத்தினை அமுல்படுத்தக் கோரி போராட்டம்

பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்தக் கோரி சி.பி.எஸ். ஒழிப்பு இயக்கத்தின் நிர்வாகிகள் சென்னையில் நேற்று மறியலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமலபடுத்தக் கோரி சி.பி.எஸ். (புதிய ஓய்வூதியம்) ஒழிப்பு இயக்கம் சார்பில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக சென்னை எழிலகம் அருகே மறியல் போராட்டம் நேற்று நடைபெற்றது.

மாநில இணை ஒருங்கிணைப்பாளர் கே.முனியாண்டி தலைமையில் நடந்த இந்த போராட்டத்தில் 100 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்




டனர். அவர்களை பொலிஸார் கைது செய்து திருவல்லிக்கேணியில் உள்ள சமூகநலக் கூடத்தில் வைத்திருந்து மாலையில் விடுவித்தனர்.

இது தொடர்பாக போராட்டக் குழுவினர் கருத்து தெரிவிக்கையில்,

தி.மு.க. தனது தேர்தல் வாக்குறுதியில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துவதாக அறிவித்தது. ஆனால் இதுவரை நிறைவேற்றவில்லை. அதற்கு மாறாக பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துவது குறித்து மூவர் குழு கடந்த பெப்ரவரியில் அமைக்கப்பட்டது. இந்தக் குழு கூடுதல் அவகாசம் கேட்டுள்ளது. அதற்குள் தேர்தல் வந்துவிடும்.

எனவே இந்த மூவர் குழுவை கலைத்துவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். இல்லையெனில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும். சென்னை மண்டலம் தவிர்த்து அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நிர்வாகிகள் இன்று மறியலில் ஈடுபட உள்ளனர். அதன் பின் டிசம்பர், ஜனவரியில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் முன்னெடுக் கப்படும்." என்று தெரிவித்தனர்.

# தி.மு.க. நடவடிக்கைகளுக்கு மக்களின் தீர்ப்பு கிடைக்கும்

## அண்ணாமலை நம்பிக்கை

தி.மு.க அரசின்நடவடிக்கைகளுக்கு மக்கள் மன்றத்தில் நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை கூறினார்.

கோவையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

"கரூர் விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவையில் பேசிய முதல்வர், அரசின் மீதும், பொலிஸ் மீதும் தவறில்லை என்று கூறியுள்ளார். பாதுகாப்புப் பணியில் 606 பொலிஸார் ஈடுபட்டனர் என முதல்வர் கூறியுள்ளார்.

ஆனால், ஏ.டி.ஜி.பி. டேவிட்சன் 500 பேர் பணியாற்றினர் என தெரிவித்துள்ளார். இவ்வாறு முன்னுக்குப் பின் முரணான தகவல்களைக் கூறுவது கண்டிக்கத்தக்கது. சி.பி.ஐக்கு ஒத்துழைப்பு வழங்கி, உண்மைக் குற்றவாளிகளை கண்டறிய தமிழக அரசு உதவ வேண்டும். கரூர் சம்பவத்துக்கு யார் காரணம் என்பதும் சி.பி.ஐ. விசாரணையில் தெரியவரும்.

நிகழ்ச்சி நடத்துபவர்களுக்கும் பொறுப்பு உள்ளது. ஆனால், அவர்கள் மீது மட்டும்தான் தவறு என்று கூறுவதை நாங்கள் எதிர்க்கிறோம். 41 பேர் உயிரிழந்த பின்னர் ஒரு அரசு அதிகாரி மீதுகூட ஏன் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை? சென்



னையில் வீதியில் நடந்த மோதல் சம்பவத்துக்கு அண்ணாமலைதான் காரணம் என்று திருமாவளவன் கூறியுள்ளார்.

அவர் முதலில் நாகரிகமான அரசியலுக்கு வர வேண்டும். நான் பொலிஸில் பணியாற்றியபோது பல ரவுடிகளை கையாண்டவன். எனவே, மிரட்டல், உருட்டல் என்னிடம் எடுபடாது." என்று தெரிவித்தார்.

# விஜய் முதலில் தன்னையே பாதுகாத்துக் கொண்டார்

## கரூர் சம்பவம் குறித்து கி.வீரமணி கருத்து



"தலைமறைவாக இருந்த த.வெ.கவினர், உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு பின் இப்போது வெளியே வருவது மட்டுமல்ல, நீதி வெல்லும் என்று சொல்கிறார்கள்."

- இவ்வாறு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பில் திருச்சி சிறுகனூரில் அமையவுள்ள, பெரியார் உலகத்திற்கு நிதி பங்களிப்பு தரும் நிகழ்ச்சி அரியலூர் தனியார் கூட்டரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் பின்னர் கி.வீரமணி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

"உச்சநீதிமன்றம் கரூர் சம்பவம் குறித்து சி.பி.ஐ. விசாரிக்க உத்தரவு பிறப்பித்தது எந்த வகையில் சரியானது என்பது குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. இதை ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் சொல்கிறேன், பத்திரிகைகள் கூட இதை தவறான உத்தரவு என்று விமர்சிக்கிறார்கள்.

தலைமறைவாக இருந்த த.வெ.கவினர், உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு பின் இப்போது வெளியே வருவது மட்டுமல்ல. நீதி வெல்லும் என்று சொல்கிறார்கள். முதலில் சிரிப்பது முக்கியமல்ல, இறுதியில் யார் சிரிக்கிறார்கள், யார் உணர்கிறார்கள் என்பதுதான் முக்கியம். முதல் பிரச்சினையே அவசர அவசரமாக வீட்டுக்கு சென்று அந்த நடிகர் தன்னை பாதுகாத்துக் கொண்டார். இப்போது பொலிஸார் சொன்னார்கள் என்று சொல்கின்றனர். பாதிக்கப்பட்டவர்களை விசாரிப்பதில் என்ன இருக்கிறது.

வேகமாக வந்தது முதல்வர் மட்டுமே. அடுத்த 12 மணி நேரத்தில் அவர் செய்த பணி மிக அதிகம். இதில் எதுவும் செய்ய முடியவில்லையே என்றதும், இதை அரசியல் மூலதனமாக்க வேண்டும் என்பவர்கள் இதை பயன்படுத்த வந்திருக்கிறார்கள். பொது வாழ்வில் வந்த கருணாநிதி, அண்ணா, பெரியார், திராவிடர் கழகத்தை சேர்ந்தவர்கள் ஓடி ஒளிந்தது கிடையாது." என்றார்.



# ஹமாஸ் அமைப்பு அனுப்பிவைத்த ஓர் உடல் எந்தப் பணயக்கைதியுடனும் பொருந்தவில்லை

## இஸ்ரேல் தகவல்



இஸ்ரேலுடனான போர் நிறுத்த அமைதி திட்டத்தின் ஒரு பகுதியாக, மேலும் இரண்டு பணயக்கைதிகளின் உடல்களை ஹமாஸ் அமைப்பு ஒப்படைத்துள்ளதாக காஸாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

டொனால்ட் ட்ரம்பின் காசா அமைதித் திட்ட முதல் கட்டத்தின் ஒரு பகுதியாக, 48 பணயக்கைதிகளையும் ஹமாஸ் திருப்பி அனுப்ப வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, உயிருடன் உள்ள 20 பணயக்கைதிகளும், 9 பணயக் கைதிகளின் உடலங்களும் இதுவரை இஸ்ரேலுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு ஒப்படைக்கப்பட்ட நான்கு உடலங்களில் ஒன்று, எந்தப் பணயக் கைதிகளுடன் பொருந்தவில்லை என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேவேளை, போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தாலும், காஸாவுக்குள் நிவாரணப் பொருள்கள் அனுப்புவதை இஸ்ரேல் தொடர்ந்து கட்டுப்படுத்துவதாக ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

பணயக் கைதிகளின் உடலங்கள் அனைத்தையும் ஹமாஸ் இதுவரை ஒப்படைக்காததே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

# ஆயுதங்களை கைவிட வேண்டும்; ஹமாஸுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

ஹமாஸ் தரப்பினர் ஆயுதங்களை கைவிட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

அதை அவர்களால் செய்ய முடியாவிட்டால், நாங்கள் செய்து முடிப்போம் என அவர் குறிப்பிட்டார்.

அந்த நடவடிக்கை மிகக் கடுமையானதாக இருக்கும் எனவும் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



# ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்துமென்றும் மோடி கூறினார்

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தன்னிடம் கூறினார் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப்,

"ரஷ்யாவிடம் இந்தியா எண்ணெய் வாங்குவதில் நான் மகிழ்ச்சியடையவில்லை. அவர்கள் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்க மாட்டார்கள் என்று மோடி எனக்கு உறுதியளித்தார். உங்களுக்குத் தெரியும், இதை உடனடியாக செய்ய முடியாது. இது ஒரு சிறிய செயல்முறை, ஆனால் செயல்முறை விரைவில் முடிவடையும்.

ரஷ்யாவை பொருளாதார ரீதியாக தனிமைப்படுத்த இது ஒரு பெரிய படி. இப்போது சீனாவையும் அதையே செய்ய வைக்கப் போகிறோம். மோடி ஒரு சிறந்த மனிதர். அவர் ட்ரம்பை நேசிக்கிறார். நான் அவரது அரசியல் வாழ்க்கையை அழிக்க விரும்பவில்லை.

நான் பல ஆண்டுகளாக இந்தியாவைப் பார்த்து வருகிறேன். அது ஒரு நம்பமுடியாத நாடு, ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு ஒரு புதிய தலைவர் அங்கு இருப்பார். ஆனால், என் நண்பர் மோடி நீண்ட காலமாக அங்கு தலைவராக இருக்கிறார்." என்றார்.



கனடா முரசு

வியாழக்கிழமை | 16/10/2025

## கனடாவில் விபத்து: இந்திய இளைஞர் பலி



கனடாவில் இடம்பெற்ற விபத்தில் இந்திய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கனடாவின் ஒன்ராறியோவில், தனது மோட்டார் 02




# நியூஃபௌன்ட்லாண்ட் மாகாணத்தின ஆட்சியை பிடித்த கன்சர்வேட்டிவ் கட்சி

நியூஃபௌன்ட்லாண்ட் மற்றும் லப்ரடார் மாகாணத்தில் முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

10 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த லிபரல் கட்சியை வாக்காளர்கள் பதவியிலிருந்து நீக்கி, கன்சர்வேட்டிவ் கட்சிக்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளனர்.

டோனி வேக்ஹம் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி இறுதி வாக்குகள் எண்ணிக்கையில் முன்னிலை பெற்றது. அதற்கு முன் லிபரல் கட்சி தலைவர் மற்றும் முதலமைச்சர் ஜான் ஹோகனுடன் கடும் போட்டி நிலவியது. 02






# கனடாவின் 3 விமான நிலையங்களில் சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

கனடாவின் மூன்று வெவ்வேறு விமான நிலையங்களின் மீது சபைர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


அதில் இரண்டு விமான நிலையங்கள் பிரிட்டிஷ் கொலம்பியாவில் அமைந்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

ஹேக்கர்கள் பொது தகவல் முறைமைகளில் ஊடுருவியதை யடுத்து பல விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

ஹேக்கர்கள் கெலோவ்னா சர்வதேச விமான நிலையத்தின் டெர்மினல் தகவல் திரைகள் மற்றும் பொது ஒலிபரப்பு அமைப்பில் ஊடுருவியுள்ளனர்.

இதனால் சில விமானங்கள் தற்காலிகமாக தாமதமானதாக அதிகாரிகள் தெரிவித்தனர். திரைகளில் "இஸ்ரேல் போரில் தோல்வியடைந்தது, ஹமாஸ் வென்றது" என்ற ஹமாஸ் ஆதரவு செய்தி காட்சியளிக்கப்பட்டது.

மேலும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறித்து "பன்றி" என அவமதிப்பான வார்த்தை 02



# மானிடோபா மாகாணத்தில் பனிப் புயல் அவசர நிலை

கனடாவின் மானிடோபா மாகாணத்தில் உள்ள நிசிசவாயாசிக் கிரி நேஷன் பகுதியில் பனிப் புயல் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 சென்டிமீட்டர் பனி பொழிவு நிலைமை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையில், கடந்த சனிக்கிழமை அதிகாலை 1:10 மணியிலிருந்து பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக பல வீடுகள் வெப்பமின்றி இருந்ததால், மூத்த குடிமக்கள் மற்றும் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

NCN சமூகத்தினர் தற்போது மானிடோபா ஹைட்ரோ (Manitoba Hydro) நிறுவனத்துடன் இணைந்து மின் விநியோகம் மீண்டும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மானிடோபாவின் பல பகுதிகளில், குறிப்பாக சான் கிளாரா (San Clara) மற்றும் ஸ்னோ லேக் (Snow Lake) பகுதிகளில், இந்த பனிப்புயல் காரணமாக மரங்கள் விழுதல், மின்கம்பிகள் சேதமடைதல் உள்ளிட்ட கடும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.



## நியூஃபௌன்ட்லாண்ட் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி உரையில் வேக்ஹம், லிபரல் கட்சியின் வெற்றியை கணித்த அரசியல் ஆய்வாளர்களை விமர்சித்தார்.

நான் 30 ஆண்டுகளாக கூடைப்பந்தாட்ட பயிற்சியாளராக இருந்தேன். போட்டியின் நடுப்பகுதியில் உள்ள மதிப்பெண் முக்கியமில்லை என்பதை அப்போது கற்றுக்கொண்டேன் என தெரிவித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்பு பலர் 'இந்த தேர்தல் முடிந்துவிட்டது' என்று நினைத்தார்கள். ஆனால் இன்று அனைவரும் அறிந்திருக்கிறோம் திரும்பிப் பெறும் வெற்றி என்றால் இதுதான் என்று அவர் கூறியுள்ளார்.

மூன்று மணி நேர வாக்கு எண்ணிக்கைக்குப் பின், 40 தொகுதிகளில் கன்சர்வேட்டிவ் கட்சி 21 இடங்களை வென்றது முந்தைய தேர்தலிலிருந்து 7 இடங்கள் கூடுதலாக பெற்றுக்கொண்டுள்ளது. லிபரல் கட்சி 15 இடங்களில் வெற்றி பெற்று, 6 இடங்களை இழந்துள்ளது.

ஜிம் டின் தலைமையிலான நியூ டெமோக்ரடிக் கட்சி இரண்டு இடங்களைப் பெற்று தங்களது நிலையை இரட்டிப்பாக்கியது. இரண்டு சுயேச்சை வேட்பாளர்களும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மொத்த வாக்கு விகிதத்தில் கன்சர்வேட்டிவ் கட்சி 44.37 வீத வாக்குகள் பெற்று முன்னிலை பெற்றது. லிபரல் கட்சிக்கு 43.43 வீத வாக்குகள் கிடைத்தன. இதன்படி சிறிய வாக்கு வித்தியாசத்தில் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றியை பதிவு செய்துள்ளது.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் காட்டப்பட்டன.

அதே நேரத்தில், ஹேக்கர்கள் விமான நிலையத்தின் ஒலிபரப்பு முறைமையையும் கைப்பற்றி, வெளிப்புற காணொலி செய்திகள் ஒலிபரப்பியதாக கூறப்படுகிறது.

இதேபோன்று, விக்டோரியா சர்வதேச விமான நிலையம் மற்றும் வின்ட்சர் சர்வதேச விமான நிலையம் (ஒன்டாரியோ) ஆகியவற்றிலும் இதே போன்ற சைபர் தாக்குதல்கள் நடந்துள்ளன என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ள ஹாரிஸ்பர்க் சர்வதேச விமான நிலையத்திலும், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகூ மற்றும் டொனால்ட் ட்ரம்ப் குறித்து அவமதிப்பான காணொலி ஒளிபரப்பு நிகழ்ந்துள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஹர்நூர் சிங் (வயது 27) மீது ட்ரக் ஒன்று மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

அந்த ட்ரக்கின் சாரதி மது போதையில் இருந்தமை தெரியவந்துள்ளது.

உயிரிழந்த இந்திய இளைஞனின் உடலை இந்தியா கொண்டுவருவதில் பல சிக்கல்கள் இருப்பதை அறிந்த அவரது குடும்பத்தினர் பஞ்சாப் அமைச்சரான சஞ்சீவ் அரோரா என்பவரை அணுக, அவர் வெளியுறவு அமைச்சகத்துக்கு கடிதம் ஒன்றை எழுதி அவசர உதவி கோரியுள்ளார்.

அதைத் தொடர்ந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்ட அந்த இளைஞனின் உடல், லூதியானாவில் சீக்கிய முறைப்படி தகனம் செய்யப்பட்டுள்ளது.




# கனடாவில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பெண் உயிரிழப்பு

கனடாவின் நொவா ஸ்கோஷியாவின் ஈஸ்டர்ன் பாஸேஜ் பகுதியில், பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த சமப்வம் தொடர்பில் தீவிர விசாரணகைள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

சீடர் லேன் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தாக்குதல் சம்பவம் ஏற்பட்டதாக பொலிஸாருக்கு தகவல் வந்தது. அங்கு சென்ற அதிகாரிகள் கையில் கத்தி வைத்திருந்த ஒரு பெண்ணை கண்டதாக தெரிவித்துள்ளனர்.

“அந்த பெண் பொலிஸ் உத்தரவின் படி கத்தியை கீழே விட மறுத்தார்,” என புதன்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள் முதலில் டேசர் கருவியைப் பயன்படுத்தியதாகவும், ஆனால் பெண் தொடர்ந்து கத்தியுடன் பொலிஸ் அதிகாரியை நோக்கி வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து, ஒருவரால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாகவும் அந்தப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



